[2002 ஏப்ரல் 29

அந்தப் பகுதிகளுக்கும் நம்முடைய உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் இதிலே நடவடிக்கை எடுத்து துரிதமாக ஏற்பாடு செய்வாரா என்பதை உங்கள் வாயிலாகக் கேட்க விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. துரைராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவருடைய நியாயமான கருத்துகளை இந்த அரசு ஏற்று, விரைவிலே அந்தப் பகுதிக்கும் குடிதண்ணீர் வசதி செய்து கொடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவைத் தலைவரையும், துணைத் தலைவரையும் கவனியுங்கள். (சிரிப்பு)

வினா எண் 252. திரு. மு. கார்த்தி, மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர்.

முற்பகல் 10-30

252—

காவிரி குடிநீர்

***3495—திரு. மு. கார்த்தி:**

மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாநகராட்சி, 6-வது கோட்டம், தந்தை பெரியார் நகரில் கட்டப்பட்டுள்ள நீர்த்தேக்கத் தொட்டியில் பாதுகாக்கப்பட்ட காவிரி குடிநீர் இதுவரை நிரப்பப்படவில்லை என்பது அரசின் கவனத்திற்கு வந்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், காவிரி குடிநீர் நிரப்புவது எப்போது?

மாண்புமிகு திரு. சி. துரைராஜ், உள்ளாட்சித் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ): சேலம் மாநகராட்சியினுடைய, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிடுகின்ற பகுதி ஊராட்சிப் பகுதியாக இருந்து மாநகராட்சியோடு இணைக்கப்பட்ட பகுதி. அந்தக் குறிப்பிட்ட

2002 ஏப்ரல் 29]

நீர்த்தேக்கத் தொட்டிக்குத் தண்ணீர் ஏற்றுவதற்கு அந்தப் பகுதியிலே காவிரி ஆற்றை ஆதாரமாகக் கொண்டு சுமார் 24.84 கோடி ரூபாய் மதிப்பீட்டில் சேலம் மாநகராட்சி குடிநீர் அபிவிருத்தித் திட்டம் நிலை-2 என்ற தலைப்பில் பணிகள் துரிதமாக நடந்துகொண்டு வருகின்றன. இந்தத் திட்டம் முழுமையாக முடிவு பெற்றதற்குப் பின்பு, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிடுகின்ற தொட்டியில் தண்ணீர் ஏற்றப்படும் என்பதைப் பணிவோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. மு. கார்த்தி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சேலம் மாநகராட்சி 6-வது கோட்டத்திற்கும், 5-வது கோட்டத்திற்கும் இதுவரை பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்கப்படவில்லை. அந்தப் பகுதிக்கு செட்டிசாவடி ஊராட்சிப் பகுதியிலுள்ள கிணற்றிலிருந்து இதுவரை தண்ணீர் வழங்கப்பட்டு வருகிறது. அதிலும் குறிப்பாக 6-வது கோட்டம், சின்னகுளப்பட்டி தந்தை பெரியார் நகர் பகுதியில் ஒரு இலட்சம் லிட்டர் கொள்ளளவு கொண்ட ஒரு மேல்நிலைத் தொட்டியும், அதேபோல 5-வது கோட்டத்திலே கோருமேடு பகுதியிலே, 60,000 லிட்டர் கொள்ளளவு கொண்ட மேல்நிலைத் தொட்டியும் இருக்கின்றன. இவற்றைக் கட்டி கிட்டத்தட்ட 15 ஆண்டுகள் ஆகின்றன. இதுவரை அந்தத் தொட்டியிலே பாதுகாக்கப்பட்ட குடிநீரோ அல்லது வேறு தண்ணீரோ ஏற்றப்படவில்லை. அந்தத் தொட்டி இதுவரை காலியாகவே உள்ளது. அதேபோல அந்தப் பகுதியிலே தண்ணீர்ப் பிரச்சினை அதிகமாக இருக்கிற காரணத்தால் சென்ற 22-04-2002, 28-04-2002 ஆகிய தேதிகளிலே ஏற்காடு சாலையில் மறியல் செய்து மிகப் பெரிய போராட்டங்கள் நடந்தன. ஆகவே, அமைச்சர் அவர்கள் இங்கே குறிப்பிட்டதுபோல அந்தத் திட்டத்தின் கீழ் ஏற்கெனவே சென்ற ஆண்டு, அதற்கு முந்தைய ஆண்டுதான் நிதி ஒதுக்கப்பட்டு, 4 இடங்களிலே தொட்டி அமைக்கும் அந்தப் பணி நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. எனவே இந்த ஆண்டு அதற்கான நிதியை ஒதுக்கியிருக்கிறார்களா, அந்தப் பணி தொடங்கப்படுமா என்பதைத் தங்கள் மூலமாக அறிவதோடு அந்தப் பகுதிகளுக்கு இப்போது இருக்கின்ற ஒரு இலட்சம் லிட்டர் கொள்ளளவு கொண்ட மேல்நிலைத் தொட்டிக்கும், 60,000 லிட்டர் கொள்ளளவு கொண்ட மேல்நிலைத் தொட்டிக்கும் தண்ணீர் வழங்குவதற்கு அரசு விரைவில் நடவடிக்கை எடுக்குமா என்பதையும் தங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

[2002 ஏப்ரல் 29

மாண்புமிகு திரு. சி. துரைராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்ட பகுதி ஏற்கெனவே நான் குறிப்பிட்டதைப்போல ஊராட்சிப் பகுதியிலிருந்து மாநகராட்சி எல்லையில் சேர்க்கப்பட்ட புதிய பகுதியாகும். அந்தக் குறிப்பிட்ட இரண்டு தொட்டிகளில் தண்ணீர் ஏற்றுவதற்குப் புதிய திட்டத்தின் மூலம் பணிகள் நிறைவு பெற்ற பின்புதான் நீர் ஏற்றப்படும் என்று துறையின் மூலமாகத் தகவல் கிடைத்திருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கையின்படி அந்தப் பகுதிக்கு விரைவிலே தொட்டியில் தண்ணீர் ஏற்றுவதற்கு வேறு வகையான திட்டத்தின் மூலமாகச் செயல்படுத்த முடியுமா என்பதைத் துறை அதிகாரிகளுடன் கலந்து பேசி விரைவிலே அந்தப் பகுதி மக்களுக்கு நல்ல குடிநீர் வசதி கிடைப்பதற்கு வேண்டிய விரைவான நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. மு. கார்த்தி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புதிதாக சேர்க்கப்பட்ட பகுதிகளுக்கு 18 நீர்நிலைத் தொட்டிகள் கட்டுவதற்காக 24 கோடி ரூபாய் சென்ற ஆட்சியிலே நிதி ஒதுக்கப்பட்டது. இதுவரை 4.5 கோடி ரூபாய் நிதி ஒதுக்கினார்கள். அதனால் அந்தப் பகுதியிலே 4 தொட்டிகளுக்கு மட்டும்தான் பணி நடைபெற்று முடிந்திருக்கிறது. இந்த ஆண்டு கண்டிப்பாக மாநகராட்சியிலே புதிதாக சேர்க்கப்பட்ட அந்தப் பகுதிகளுக்குப் பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்குவதற்கு அரசு நிதி ஒதுக்கி, இந்த ஆண்டிலாவது அந்த நீர்நிலைத் தொட்டிகளைக் கட்டுவதற்கு நடவடிக்கை எடுக்குமா என்பதை மீண்டும் அறிந்துகொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. துரைராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த ஆண்டு அதற்கு நிதி ஒதுக்கீடு செய்ததற்கு உண்டான சரியான தகவல் இல்லை. அந்தக் குறிப்பிட்ட பகுதிக்கு சேலம் மாநகராட்சிக்கு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கிறதா என்ற முழு விவரம் கிடைத்ததற்குப் பின்பு மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு விரிவான விடை அளிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 253, திரு. ஆர். சக்ரபாணி, மாண்புமிகு கூட்டுறவு, உணவு, நுகர்பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர்.

TRUTH ALONE TRIUMPHS